# SAIVA BHANU KSHATRIYA COLLEGE

(Aruppukottia Nadargal Uravinmurai Pothu Abiviruthi Trustukku Pathiyapattathu)

Aruppukottai




# MAGAZINE

## 2026-2027

## உலக யோகா தினம் (ஜூன் 21)

யோகம் + ஆசனம் யோகாசனம். ஆசனம் என்றால் இருக்கை. அதாவது அமரும் இடம் என பொருள். யோகம் என்றால் ஒன்றுபடுதல் இணைதல் என பொருள்படும். இருக்கையில் அமர்ந்தபடி செய்யும் பயிற்சிகளை யோகாசன பயிற்சிகள் என்பர் யோகாசனம் இந்திய முனிவர்களின் கண்டுபிடிப்பு. பதஞ்சலி முனைவர் யோகாவின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். இமயமலை சித்தர்களின் உயிர் துடிப்பு. உடலும் உள்ளமும் அமைதியாகவும் ஆரோக்கியமானதாகவும் இருந்தால் மட்டுமே நமது செயல்கள் சிறப்பாக இருக்கும். உடலும் மனமும் ஒன்று சேர்ந்து உயிரோட்டமான வாழ்வு வாழ யோகா நமது வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான ஒன்று. பழங்கால சித்தர்கள் யோகா பயிற்சி செய்து 300 ஆண்டுகள் வரை வாழ்ந்தனர். இயற்கையான உணவு நீர் நவதானியங்கள் உண்டு ஆரோக்கியமாக நோய் நொடியின்றி மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். வணக்கம் என்று இரண்டு கைகளை சேர்த்து சொல்வதே ஒரு ஆசனம் தான்.

கைகுலுக்கு நமது நாட்டு பண்பாடு அன்று. கை குலுக்குவதால் நோய்க்கிருமிகள் தொற்றி பல நோய்கள் உருவாகிறது.

### யோகாசனம் செய்வதால் ஏற்படும் நன்மைகள்.

- இளமையாக என்றும் இருக்கலாம்
- நோய்கள் நமது உடலை குறிப்பாக சர்க்கரை வியாதி அணுகாது
- ஞாபக சக்தி கிடைக்கும்
- நீண்ட ஆயுள் கிட்டும்
- மன அழுத்தத்தை போக்கலாம்

- மன வலிமை கிட்டும்
- கோபத்தை பயத்தை ஒழித்து சாந்தமடையலாம்
- நரம்புகள் சதைகள் எலும்புகள் வலிமை அடையும்
- நல்ல சீரான ரத்த ஓட்டம் நடைபெற்று இதயம் பாதுகாக்கப்படும்
- யோகாசனப் பயிற்சிகள் மூலம் வந்த நோயை விரட்டலாம். நோய் வராமல் தடுக்கலாம்

## **யோகாசனம் செய்வோர் கடைபிடிக்க வேண்டிய விதிகள்**

- அதிகாலையில் காலைக்கடன்களை முடித்துவிட்டு குளித்துவிட்டு வெறும் வயிற்றில் யோகா செய்ய வேண்டும்
- நல்ல விரிப்பு விரித்து அதன் மேல் யோகா செய்ய வேண்டும்
- இரவு விழித்திருந்தால் ஆசனம் செய்யக்கூடாது. சாந்தி ஆசனம் என்று சொல்லக்கூடிய சவாசனம் மட்டும் செய்யலாம்
- யோகா குரு சொல்படி ஆசனம் செய்ய வேண்டும்
- பெண்கள் மாதவிடாய் காலங்களில் ஆசனம் செய்யக்கூடாது
- கர்ப்ப காலத்திலும் ஆசனம் செய்யக்கூடாது
- நோய் மற்றும் மிகுந்த களைப்பாயிறுக்கும் போது ஆசனம் செய்யக்கூடாது
- வேகமாக செய்வது உடற்பயிற்சி மெதுவாக செய்வது ஆசனப் பயிற்சி
- ஆசனப் பயிற்சி செய்யும் இடம் காற்றோட்ட வசதிகளை இடமாக கண்டிப்பாக இருக்க வேண்டும்
- தவறாக செய்தால் பக்க விளைவுகள் ஏற்படும்
- உணவு உண்ட பின் குறைந்தது 5 மணி நேரம் கழித்து ஆசன பயிற்சி செய்ய வேண்டும்

ஐ.நா. சபையில் இந்தியாவின் கோரிக்கையை ஏற்று உலக யோகா தினம் ஜூன் 21 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. இது இந்தியாவிற்கு கிடைத்த மாபெரும் வெற்றி. இந்தியர்கள் அனைவரும் பெருமிதம் கொள்வோம். தினமும் யோகா செய்து இந்தியாவின் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டுவோம். யோகா செய்வதால் உடலில் எந்த நோயும் அணுகாது. வள்ளலார் சொன்ன 16 வகை செல்வங்கள் பெற்று பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறாண்டு வாழ்க இவ்வையகம்! வாழ்க இந்தியா! வளர்க இந்தியா!

**கு.செல்வம்** M.A.,M.P.Ed.,
உடற்கல்வியியல் துறை
சைவ பானு சத்திரிய கல்லூரி
அருப்புக்கோட்டை



S.S.Shwetha

I M.Com

# கணிதமே! நீயின்றி

பழையன கழித்தலுமில்லை!
புதியன சேர்த்தலுமில்லை!
வரைமுறை வாழ்க்கையுமில்லை!
பணம்பொருள் பெருக்கமுமில்லை!
ஆதியின்றி அந்தமின்றி
ஆண்டவனுக்கும் நிகரென
திகழும் கணிதமே, நீயின்றி
இந்த உலகமே இல்லை...!

எந்த நேரம் தொடங்கினாலும்.
எல்லா நேரமும் நல்ல நேரமாக இருப்பது
பள்ளி வாழ்க்கையில் மட்டுமே!

தோல்வியை நினைத்து
அச்சம் கொள்பவன்
வெற்றி அடையவே
தகுதி இல்லாதவன்!

இரா. அனுசுயா
**I B.Sc Maths**

# <u>பூமியை கெடுக்கும் ஜீவராசி</u>




பூமி தாய்க்கு ...
ஆடை உடுத்த
செடி கொடிகள் உண்டு !
பூமியை அலங்கரிக்க
அனுதினமும் பூக்கள் உண்டு

பூமியின் அழுக்கை நீக்க
மழையும் உண்டு!
பூமியை சலவை செய்ய
சூரியன் உண்டு!
பூமியை குளிர்விக்க
நிலவும் உண்டு!

பூமியை பாழ்படுத்த
மனிதன் என்னும்
ஜீவராசி மட்டுமே உண்டு!!!

V.லோகிதா
**III B.Sc.Zoo**




T.Dayisseeni

I BA English

# Advancement of AI in Life Science August AI

August AI is an India-based health technology startup that builds an AI-powered digital health companion designed to help users understand symptoms, interpret medical reports, and manage healthcare information through an intelligent chatbot interface. It combines AI insights with a network of doctors and partner hospitals to provide reliable health guidance and support throughout a user's health journey. The platform serves millions of users globally and recently raised funding to expand its product and data capabilities.

It's accessible through WhatsApp with the number: +91 8738030604

Founded: 2022

Founder: Anuruddh Mishra

Focus: AI health assistant/chatbot for symptom checking, report analysis, and ongoing care support.

## Deep lab cut

Deep Lab Cut is an open-source, deep learning–based software for markerless pose estimation. It enables researchers to track and quantify the movement of animals (and humans) from video recordings by identifying body parts such as joints, limbs, or facial features without attaching physical markers.

By training neural networks on a small set of labeled images, DeepLabCut can achieve high-precision motion tracking across different species and experimental settings. It is widely used in animal behavior studies, neuroscience, biomechanics, and ecology to analyze posture, movement patterns, and behavior objectively.

## Cell Profiler

CellProfiler is an open-source, AI-assisted image analysis software designed for quantitative analysis of biological images. It automatically identifies and measures cells, tissues, and subcellular structures from microscopy images by extracting features such as size, shape, intensity, texture, and spatial relationships.

CellProfiler is widely used in cell biology, pathology, drug discovery, and high-throughput screening, helping researchers analyze large image datasets efficiently and objectively without manual measurement.

## Biobert

BioBERT (Biomedical Bidirectional Encoder Representations from Transformers) is a domain-specific AI language model built on Google's BERT architecture and pretrained on large biomedical corpora, including PubMed abstracts and PubMed Central full-text articles. This additional training allows BioBERT to better understand biological and medical terminology, complex sentence structures, and contextual meanings that general language models often miss.

BioBERT is widely used for biological and biomedical text mining tasks such as named entity recognition (genes, proteins, diseases, drugs), relation extraction, document classification, and biomedical question answering. By improving accuracy in these tasks, BioBERT helps researchers efficiently extract knowledge from vast scientific literature, supporting drug discovery, genomics research, clinical decision support, and biomedical data analysis.

## PAWS (Protection Assistant for Wildlife Security)

PAWS (Protection Assistant for Wildlife Security) is an AI-based decision-support system developed to help protect wildlife from poaching and illegal activities. It uses artificial intelligence, game theory, and predictive analytics to analyze past poaching data, terrain features, and patrol routes, and then recommends optimal patrol strategies for forest rangers.

PAWS helps conservation agencies allocate limited resources more effectively, predict high-risk poaching areas, and improve enforcement outcomes. It has been applied in national parks and wildlife reserves worldwide, supporting smarter, data-driven wildlife conservation and security efforts.

## MaxENT

MaxENT (Maximum Entropy Model) is an AI-based statistical modeling approach used to predict species distribution and ecological niches using presence-only data. It estimates the most likely distribution of a species by relating known occurrence records to environmental variables such as climate, elevation, and land cover, following the principle of maximum entropy.

MaxENT is widely used in ecology, biogeography, and conservation biology to model habitat suitability, assess climate change impacts, and support biodiversity conservation planning, especially when absence data are unavailable.

## Leaf Snap

LeafSnap is an AI-based plant identification system designed to identify plant species from images of leaves. It uses computer vision and machine-learning algorithms to analyze leaf characteristics such as shape, vein patterns, edges, and texture, and then matches them with a curated botanical database.

LeafSnap is widely used in botany, education, and biodiversity studies, and is available as a mobile application, making it useful for students, researchers, and nature enthusiasts to quickly identify plant species in the field.

## Flora Incognita

Flora Incognita is an AI-based plant identification application that uses deep learning and computer vision to identify wild plant species from photographs. By analysing features such as leaves, flowers, stems, and growth form, it accurately matches images with a scientifically curated botanical database.

Flora Incognita is widely used in botanical research, biodiversity monitoring, conservation, and education. In addition to identification, it provides ecological information, distribution data, and conservation status, making it a valuable tool for both researchers and nature enthusiasts.

## Plantix

Plantix is an AI-powered mobile application for plant disease and pest diagnosis, primarily used in agriculture. It uses image recognition and machine learning to analyze photos of affected plant leaves, stems, or fruits and identify diseases, pests, and nutrient deficiencies.

Plantix also provides treatment recommendations, preventive measures, and farming advice, helping farmers improve crop health and yield. It is widely used by farmers, agronomists, and agricultural extension services, especially in regions with limited access to expert support.

## Agro Scout

AgroScout is an AI-based agricultural intelligence platform that uses computer vision, drones, and satellite imagery to monitor crop health at scale. It automatically detects pests, diseases, nutrient deficiencies, and crop stress in real time by analyzing high-resolution field images. AgroScout helps farmers, agribusinesses, and agronomists make data-driven decisions, enabling early intervention, targeted treatment, reduced pesticide use, and improved yields. It is widely used in precision agriculture for large-scale crop monitoring and management.

## Farm Logs

FarmLogs is an AI-enabled farm management and decision-support platform used in precision agriculture. It helps farmers monitor fields, track crop performance, manage inputs, and analyze weather and soil data using data analytics and machine learning.

FarmLogs supports data-driven farming decisions such as planting schedules, irrigation planning, fertilizer application, and yield optimization, enabling farmers to increase productivity, reduce costs, and improve sustainability.

**S.Kalam Nabi Azad**

**III B.Sc.Zoo**

# வார்த்தைகளுக்கு உயிர்

“மௌனத்தில் பிறந்து
இதயத்தில் வளர்ந்து
உதடுகள் கடந்தால்
உயிர் பெறும் வார்த்தைகள்”

“வலி சொல்லாத கண்ணீருக்கு
குரலாகும் சில சொற்கள்,
சிரிப்பின் பின்னால் மறைந்த
சந்தோஷத்தை சொல்லும் சில
சொற்கள்”.

“அம்மா என்ற மூவெழுத்தில்
அன்பு உயிர் பெறுகிறது.
நட்பு என்ற சொல்லால் நம்பிக்கை
நடக்கிறது "

“காகிதத்தில் உறங்கிய எழுத்துகள்
எண்ணங்களில் விழித்தால்,
கவிதையாய் மாறி
மனங்களை தொட்டு விடும்."

“கூர்மையான வார்த்தை
காயப்படுத்தும்,
கனிவான வார்த்தை குணப்படுத்தும்,
அதனால் தான்
வார்த்தைகளுக்கு உயிர் உண்டு”.

“உயிர் உள்ள வரை
உண்மை பேசுவோம்,
வார்த்தைகளால் அல்ல
வார்த்தைகளுக்குள் உயிர் ஊற்றி
பேசுவோம்”.

“சொல்லாத வலிக்கு
மொழியாகும் சில சொற்கள்,
அழுகை மறைத்த முகத்திற்கு
ஆறுதலாகும் சில சொற்கள்."

“கண்ணீருக்கு அர்த்தம் தரும்,
மகிழ்ச்சிக்கு ஒளி சேர்க்கும்,
மனதின் மொழியாய் பேசும்
மௌனத்தின் குரலே-வார்த்தைகள்."

“அன்பாய் உச்சரித்த ஒரு சொல்,
உடைந்த மனதை இணைக்கும்.
சோர்ந்த உயிருக்கு
புது நம்பிக்கை தரும்”.

“கோபத்தில் வீசும் சொற்கள்,
கத்தியைப் போல கூர்மையானவை,
உறவுகளை நொறுக்கும்
அமைதியைக் குலைக்கும்.''

“தாலாட்டாய் ஒலிக்கும்
தாயின் இனிய சொல்,
உலகத்தை அறிமுகப்படுத்தும்
முதல் உயிர் மொழி."

“கவிஞனின் பேனாவில்
உயிர் பெறும் எழுத்து,
வாசகனின் மனதில்
நித்தியமாய் வாழும்".

“எழுத்தில் கல்வி,
வார்த்தையில் அறிவு,
வாழ்க்கைக்கு வழிகாட்டும்
மௌன ஆசிரியர்கள்."

“நீதிக்காக எழும் சொல்
மாற்றத்தை விதைக்கும்,
வார்த்தைகள் கூட
போராளிகள் ஆகும்.

**K.** பிரியதர்ஷினி
**I MA.History**

# <u>என் தாய்</u>



ஒரே பிம்பமாய்
புகைப்படம் இல்லா
மனத்திரையில்-என்
அன்னையின் முகம்.....
அண்டத்தை கருவாக்கி
அதில் என்னை உருவாக்கி
செந்நீரை அமிழ்தாக்கி
வார்த்து மகிழ்ந்தாய்....
விசால அகிலத்தில்
பயணம் செய்ய கற்று தந்தாய்
புகழோடு பெரியோர் - போற்ற
புன்னகை பூத்து மகிழ்ந்தாய்....
நன்றாய் வளர்த்தாய்
நன்னிலத்தில் - சீமானாய்
கோபுரத்தில் கலசம் - போல்
உச்சம் தொட வைத்து விட்டாய்
என்னை ஈன்ற தாயே
நீயின்றி அணுவும் இல்லை
நீயின்றி அண்டமும் இல்லை
நிலைக்கச் செய்வேன்
நின் புகழ் நிலையாக
இவ்வையகம் உள்ளவரை.

பெ.கஸ்தூரி
I B.Com(CA)



P.Parvathi

II B.Sc (IT)



N.Mohana Priya

II B.Com

## ODE TO SBK COLLEGE

At SBK college, where dreams take flight, we learn to grow, to rise, to fight with books in hand and goals in sight, Our future shines forever bright.

Through halls of knowledge, strong and true SBK college shapes what we pursue. Teachers guide with hearts so kind, lighting path for every mind.

In English family, pride runs deep, we don't just learn our words leap. Few in number, yet fierce in sound, we shake the stage, we own the ground.

Like a quiet spark that starts a blaze, we win big crowns, we earn the praise small in count, but bold in sum.  we roar for SBK - boon after boon!

Not just a college, not just a name, SBK college fuels every flame. Forever proud, wherever we go, SBK college light will always glow....

**S. THEEPIKA**

**II MA English**



**J.Vijayamuksh Pandiyan**

**I M.Com**

# <u>என்னை கவர்ந்த புத்தக காவியமே</u>

என்னை ஈர்த்த புத்தகமே- இன்று
உனை வாசிக்க நான் வந்தேன்.




என்னை இழந்த இரவுகளை
மறையச் செய்த காவியம் -(நீ)...

நான் தனிமை என்று எண்ணி
அழுத நாட்களை மறைத்து

உனக்கு நான் உள்ளேன் என்று
கூறிய என் காவிய புத்தகமே...

வாழ்க்கை எனும் சுழலை - என்னை
அறியச் செய்த காவியமே ...

கற்றுத் தேர்ந்து எனை வெற்றி
பெற செய்த என் புத்தக அன்னைக்கு

உன் புத்தக மகள் எழுதிய
புத்தக காவியம் இது .... !

M. அருணாதேவி

**I MA History**

# The Pages That Remembered

Farik, a forty-year-old man, was driving to his grandparents' village house, which they planned to sell. As he travelled, childhood memories filled his mind. Long ago, he had written his daily life in a diary.

After reaching the village, Farik met his childhood friend Rahul. They talked for hours before Farik went to the old house.

In his dusty room, he searched for his diary and finally found it under the bed, torn and dirty. He wiped the cover and sat down to read.

While reading, Farik suddenly felt himself pulled into the pages. He found himself on 12 September 1992, when he was fifteen.

That day, there was an important school competition. Rahul was talented and sure to win. Farik, jealous and careless, lied and followed him secretly.

Near the river, Farik pushed Rahul into the water and ran away. Rahul was badly injured, while Farik went on to win the competition.

Weeks later, Farik asked Rahul who had pushed him. Rahul knew the truth but remained silent.

Farik returned to the present, filled with shame. He rushed to Rahul's house and confessed everything.

Rahul looked at him calmly and said, "You are my friend."

Farik realized that forgiveness could hurt more than punishment.

For a moment, neither of them spoke. The years of silence between them felt heavier than words. Farik's eyes filled with tears.

"Why didn't you tell anyone?" he asked softly.

Rahul smiled faintly. "Because I didn't want to lose my only friend."

Those words struck Farik's heart like a storm. He understood that while he had won the competition that day, he had lost something far more valuable-his honesty.

"I don't deserve your kindness," Farik whispered.

Rahul placed a hand on his shoulder. “We were children. What matters is what we become now.”

That evening, Farik returned to the old house once more. He opened his diary and turned to the last blank page.

With trembling hands, he wrote, “Some victories are empty. But forgiveness can fill a lifetime of regret.”

He closed the diary gently, feeling lighter than he had in years. As the sun set over the village, Farik knew that the past could not be changed-but the future still belonged to him.

**S.Ashiya Barvin**

**II B.Sc Zoo**



## அக்னி பறவையே

கமலக் காவியங்கள் பறைசாற்றும்
-இவ்வுலகம்
குருட்டுப் பார்வை கொண்டது ஏனோ?.

அக்னி சிறகு கொண்டு பறக்க
-வேண்டிய பெண்கள்
இன்று இருட்டு அறையில் அடைந்து
இருப்பது ஏனோ?...

குமுறும் அறையில் உரைக்கும் உன்
குரலை உலகம் கேட்க வேண்டும்.

விதைக்கவே தடைசெய்த உன்னை
நீ வேரூன்றி மரமாக வேண்டும் ....

ஊரார் என்ன உறைப்பாரோ என்று
எண்ணத்தை நீ உடைத்தெரிய வேண்டும்.

கொஞ்சித் திரியும் பைங்கிளியை
போன்று நீ சுற்றித்திரிய வேண்டும்.

துள்ளித் திரியும் மானை போலும்
கற்றுப் பறக்கும் பறவைபோலும்

வீரத்தில் பெண் சிங்கத்தை போன்றும்
நீ வாழ வேண்டும் .

என்று, என் கேள்வி கொண்ட
கவியை உன் திறவாத
உள்ளம் திறந்து பார்க்கட்டும்...!

M. அருணாதேவி
I MA History



M.Nivetha

I MA History



P.Parvathi

I B.Sc (IT)

# நேரமே வாழ்க்கையின் செல்வம்

**முன்னுரை**

மனித வாழ்க்கையில் மாற்ற முடியாத, மீட்டெடுக்க முடியாத ஒன்றாக இருப்பது நேரம், பணம், சொத்து அனைத்தையும் மீண்டும் பெறலாம்;

ஆனால் ஒருமுறை சென்ற நேரம் திரும்பாது. அதனால் தான் நேரம் வாழ்க்கையின் மிகப்பெரிய செல்வமாகக் கருதப்படுகிறது.

**நேரத்தின் மதிப்பு**

நேரம் அனைவருக்கும் சமமாகக் கிடைக்கிறது. ஒருநாளில் 24 மணி நேரம் எல்லோருக்கும் பொதுவானது.

ஆனால் அதை எவ்வாறு பயன் படுத்து கிறோம் என்பதில் தான் மனிதனின் உயர்வும் தாழ்வும் நிர்ணயிக்கப்படுகிறது.

**நேரமும் மனித வெற்றியும்**

நேரத்தை திட்டமிட்டு பயன்படுத்தும் மனிதன் வாழ்க்கையில் வெற்றியடைகிறான். நேரத்தை வீணாக்குபவன் பின்னடைவை சந்திக்கிறான்

வெற்றி பெற்ற மனிதர்களின் வாழ்க்கையை ஆராய்ந்தால், அவர்கள் அனைவரும் நேரத்தை மதித்தவர்கள் என்பதே உண்மை.

**மாணவர் வாழ்க்கையில் நேரத்தின் பங்கு**:

மாணவர்களின் எதிர்காலம் நேர மேலாண்மையில் உள்ளது. படிப்பு, விளையாட்டு, ஓய்வு ஆகியவற்றுக்கு சரியான நேரத்தை ஒதுக்கினால் மாணவர்கள் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க முடியும்.

**நேரத்தை வீணாக்கும் பழக்கங்கள்** :

சோம்பேறித்தனம், தள்ளிப்போடும் பழக்கம், அளவுக்கு அதிகமான பொழுது போக்கு ஆகியவை. நேரத்தை வீணாக்குகின்றன. இத்தகைய பழக்கங்கள் வாழ்க்கையில் தோல்விக்கு வழிவகுக்கின்றன.

**நேரத்தை மதிக்கும் பழக்கங்கள்** :

திட்டமிடுதல், நேரத்திற்கு பணிகளை முடித்தல், ஒழுக்கம், தன்னம்பிக்கை போன்றவை நேரத்தை சரியாக பயன் படுத்த உதவுகின்றன. இவை மனிதனை உயர்வுக்கு கொண்டு செல்கின்றன.

**நேரம் மற்றும் ஒழுக்கம்**

நேரம் காப்பது நல்ல ஒழுக்கத்தின் அடையாளம் நேரத்தை மதிக்கும் மனிதன் மற்றவர்களின் நேரத்தை மதிக்கிறான்.

இது சமூக வாழ்வில் நல்ல மதிப்பை தருகிறது.

**பழமொழிகள் கூறும் நேரத்தின் முக்கியத்துவம்**

“காலம் பொன்னைவிட மதிப்பானது " “இன்றைய செயலை இன்றே செய்” என்ற பழமொழிகள் நேரத்தின் அருமையை நமக்கு உணர்த்துகின்றன.

**நேர மேலாண்மை** :

நாளாந்திர அட்டவணை அமைத்துக் கொண்டு செயல்படுவதன் மூலம் நேரத்தை பயனுள்ளதாக பயன்படுத்தலாம்

இதனால் மன அழுத்தம் குறைந்து வாழ்க்கை சீராக அமையும்.

**நேரத்தின் இழப்பு வாழ்க்கையின் 'இழப்பு**

நேரத்தை வீணாக்குவது வாழ்க்கையை வீணாக்குவதற்கு சமம். இழந்த நேரம் மீண்டும் கிடைக்காது என்பதால் ஒவ்வொரு நிமிடமும் முக்கியமானதாகும்.

**இளைஞர்களும் நேரத்தின் பொறுப்பும்**

இளைஞர்கள் நேரத்தை சரியாக பயன்படுத்தினால் நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாகும்

நேரத்தை தவறாக பயன்படுத்தினால் சமூக முன்னேற்றம் பாதிக்கப்படும்.

**முடிவுரை**

நேரம் என்பது மனித வாழ்க்கையின் அடிப்படை செல்வம் அதை வீணாக்காமல், திட்டமிட்டு, ஒழுக்கத்துடன் பயன்படுத்தினால் வாழ்க்கை வெற்றி பெறும் மகிழ்ச்சியில் நிரம்பும்

ஆகவே, நேரமே வாழ்க்கையின் உண்மையான செல்வம் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**K.பிரியதர்ஷினி**
**I MA History**

## The Last Train

It was a calm evening at the railway station. Priya, a respected twenty-five-year-old woman, sat alone on the platform, waiting for her train. Hours passed, yet there was no announcement.

Confused, she walked to the ticket counter.

"I've been waiting for a long time. When will the Chennai Express arrive?"

"The train is delayed," the clerk replied. "Thirty more minutes."

She returned to the platform. Rain drummed against the roof, and a cold wind crept into her bones. An old man in a red jacket sat beside her.

"Are you feeling cold?" he asked gently. "No," she replied, though her teeth chattered.

He placed his red jacket over her shoulders and smiled. When he heard she was waiting for the Chennai Express, the announcement echoed-the train would arrive in five minutes.

Suddenly, the old man trembled. "I need my blood pressure tablets," he whispered. "Please... the pharmacy."
Heart pounding, Priya ran. When she returned, the platform was empty. The train had left. The old man was gone.
The next morning, her breath caught as she read the newspaper. "Chennai Express Met with a Major Accident Last Night. No Survivors."
Shaking, Priya rushed back to the station and asked the officials to check the CCTV footage.
The screen showed only one person on the platform.
Priya-sitting alone, wearing a red jacket.

**S.Ashiya Barvin**

**II B.Sc Zoo**

## <u>எண்களின் காதலன் இராமானுஜன்</u>

வெள்ளைத்தாள் இல்லையென வெறும் தரையில் கோடிட்டாய்! கண்ணுறக்கம் இன்றி ஒரு கணிதத் தவம் புரிந்தாய்!

எண்களோடு நீ நடத்திய எண்ணற்ற உரையாடல்! எங்களுக்கு அது என்றென்றும் ஒரு முடிவில்லாத் தேடல்!

ஈரோட்டு வீதியிலே இமயமாய் நின்றவன் நீயே! பரபரக்கும் லண்டனிலே பாடமாய் நின்றவனும் நீயே!

உன் மூச்சுக்காற்றில் கூட முத்தாய் உதித்தது சில சூத்திரம்! பின்னாட்களில் அதுவே படைத்தது பல சரித்திரம்!

கணிதச் சிக்கலுக்குள்ளே கவிதையைக் கண்டவன் நீ! அதை இனிமையாக்கி எங்களுக்கு இலக்கணம் தந்தவனும் நீ!

பூஜ்ஜியத்திற்குள்ளே இப்பூமிப் பந்தையே அடக்கிவிட்டாய்! ஆனால் அதற்கு ஏன் முப்பத்தி இரண்டிலேயே முற்றுப்புள்ளி வைத்தாய்!

மண்ணில் புதைந்தும் மங்காத ஒளி நீ! என்றென்றும் விண்ணில் மின்னும் வியப்பான விண்மீன் துளி நீ!

இப்படி அடுக்குத் தொடர்களாலும், வார்த்தை ஜாலங்களாலும் உன்னைப் புகழ்ந்தால் கூட நேரம் போதாது..

ஏனென்றால்...

இராமானுஜன் என்னும் ராட்சசப் பேரறிவு நீ!

**M.**சுந்தர மகாலிங்கம்

**II B.Sc Maths**

## மரணம்

மாலையில் மரணம்
என்று தெரிந்தும்
காலையில் சிரிக்கின்றன
பூக்கள்

## நட்பின் எல்லை

நட்பு என்பது தேன் கூடு அதைக் கட்டிக்காப்பது பெரும்பாடு
பிரிவு என்பது கிடையாது, அதை பிரிந்தால் மனம் தாங்காது.

## வெற்றியா ?தோல்வியா?

வெற்றியின்போது கைதட்டும்
பத்து விரல்களை விட
தோல்வியின் போது
கண்ணீரைத் துடைக்கும்
ஒரு விரலே சிறந்தது.

## கோபமா? காதலா?

மலர்கள் உதிர்வது
காற்றின் மீது கொண்ட
கோபமா? இல்லை
பூமியின் மீது கொண்ட காதலா?

## உயிர் உனக்கு

மெழுகுவர்திக்கு உயிர் கொடுக்க
உயிரை விட்டது தீக்குச்சி
அதை நினைத்து, நினைத்து
உருகியே உயிர் விட்டது
மெழுகுவர்த்தி

## அம்மாவின் அன்பு

அம்மா உன்னை கடவுளோடு ஒப்பிட்டால்
ஏற்றுக் கொள்ள மாட்டேன்.
கடவுள் கல்லில் செய்த உருவம் ஆனால்
அம்மா அன்பில் செய்த இதயம்.

**P.** நந்தினி
**I.MA History**




**E.Sivasangari**

**II B.Sc Zoo**




**M.Nivetha**

**I MA History**

# பொறுத்தாருக்கே நல்வாழ்வு

அழகான அருவியும் அற்புதமான விலங்குகளும் வாழும் காட்டில் ஒரு தாய்மானும் அதன் குட்டியும் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன. அந்த மான் குட்டி பிறந்து இரண்டு நாட்களே ஆகிறது.

அந்த மான்குட்டி நிறைய கனவுகளோடும், தனக்கு நிறைய நண்பர்கள் கிடைப்பார்கள் என்றும் ஆனந்தத்தில் அங்கும் இங்கும் துள்ளி விளையாடியது.

தனது அம்மாவிடம் வந்து அதனுடைய கனவுகளையும், ஆசைகளையும் கூறியது அதன் தாயும் புன்சிரிப்பை காட்டியது.

சில நேரம் கழித்து, தனது வேலையில் கவனம் செலுத்தியது. அச்சமயத்தில், நான்கு திசையிலும் கவனிக்கும். போது சில விஷயங்களை கண்காணித்தது. அந்த அழகான காட்டில் நான்கு திசையிலும் ஒவ்வொரு திசையாக பார்க்கும்போது ஒரு திசையின் ஆலமரத்தில் ஒரு வேடன் இருந்தான். அவன் பல நாட்கள் பசியுடன் இறைக்காக காத்துக்கொண்டிருந்தான்.

அந்த மானை குறி வைத்து தாக்க தயாராக இருந்தான் அதை கவனித்த மான் அடுத்தத் திசையில் பார்த்தபொழுது அங்கு அழகான புல்வெளி இருந்தது.

அதனை உற்று நோக்கிய போது ஒன்றை கவனித்தது. அது முகத்தில் வரிகளுடன் பாய தயாராக இருந்தது. அது வேறொன்றுமில்லை, கோரமான புலி. அந்த மானின் மனதில் ஐயம் தோன்றியது

அப்படியே, மூன்றாவது திசையில் பார்க்கும் போது அடர்ந்த காட்டில் தீ பற்றி எரிந்தது. அதனை பார்க்க. முடியாமல் தவித்து கொண்டிருந்த மான் தனது குட்டியை கண்ணீர்மல்க பார்த்தது.

தனது குட்டி எதையும் அறியாமல் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. தனக்குள் நிறைய ஆசைகளையும், கனவுகளையும் வைத்திருந்த அதற்கு தெரியாது சிறு மணித்துளியில் என்ன நடக்கப்போகின்றதென்று இறுதியாக அந்த தாய் மான் கடைசி திசையையும் பார்த்தது.

அத்திசையிலும் கரைபுரண்டு ஓடும் ஆறு ஒன்று. இருந்ததை பார்த்தது. எத்திசையிலும் வழியின்றி வலியுடன் பார்த்தமான்

தப்பித்தால் இறந்துவிடுவோம் என்று பொறுமைகாத்தது, அந்நொடியில் வானத்தை அண்ணார்ந்து பார்த்தது.

திடீரென்று அதன் கண்ணில் ஒரு துளி விழுந்தது. என்னவென்று காணும் பொழுதுக்குள்ளே இடியுடன் கூடிய பெரிய மழை பெய்ந்தது.

அதில் அந்த வேடனுடைய அம்பு தடம் மாறி பாயவந்த புலிமேல் குத்தியது. வேடனுக்கும் உணவு கிடைத்தது எரிந்து கொண்டிருந்த காட்டுத்தீ அணைந்து மானுக்கும் வழி உண்டாகியது.

இதிலிருந்து, நாம் என்ன தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் பொறுத்தாருக்கே புகழும், இன்பமும் நிறைந்த நல்வாழ்வு கிடைக்கும்.

இரா.மோகனவள்ளி

**II M.Sc. Maths**



R.Anusiya Devi

## The Ghost at the Window

Kiran moves into a quiet old house on the outskirts of the city. The area is Peaceful, almost too silent at night. Or his first evening, while sitting in the living room, he casually gives a glance at the Window and suddenly freezes outside, in the darkness, a Pale, blurry face seems to be staring straight at him.

He blinks. It disappears. He convinces himself it was just his imagination. The next night, at exactly the same time, he sees it again. A white face. Still, watching him through the glass. His heart starts racing. He quickly turns off the lights and the face vanishes.

Now fear slowly builds. He avoids looking at the window, but curiosity wins every night. Each time the Porch light is on, the face appears. When he switches it off, it disappears. He starts lasing sleep. He Checks CCTV - nothing unusual outside. No footprints, no movement just an empty yard.

On the fourth night, determined to end the fear, he grabs a stick and rushes outside to confront whatever is standing there. But when he reaches the yard there is absolutely по one. Confused, he slowly turns back towards the house. That's when he notices it.

With the Porch light shining directly at the glass window, his own reflection looks Pale and distorted in the dark. The angle of the light makes his face appear ghostly and unfamiliar. The "ghost" staring at him every night....was just him.

The horror was never outside the house! It was his own fear amplified by darkness and Imagination. Sometimes what scares us the most is just our own reflection - fear grows when we don't check the truth.

**T. Induja**
**S. Jegadeeswari**
**III BA English**



## முயற்சி

அவமானத்தை கண்டு பயந்துவிடாதே
கனவு காணாமல் இருந்துவிடாதே

கடினமாய் உழைக்க கற்றுக்கொள்
கடமை இருக்கு ஒப்புக்கொள்

மறந்துவிடு பழையகாலத்தை பற்றி
முயற்சி எடுத்தால்தானே வரும் வெற்றி...

ஆசைபடாத மனிதனும் இல்லை
ஆசையை கைவிட்டவன் மனிதனே இல்லை

செ.காயத்ரி
**III B.Sc Maths**



R.Sabari Lakshmi

I B.Com (CA)



S.Ramadevi

III B.Sc Maths

# குறுக்கெழுத்து புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | 3 | X | X |
| | X | X | 4 | | 5 | | | | |
| 6 | | | X | | X | 7 | | X | |
| | | | X | | 8 | | X | X | |
| | | 9 | 10 | X | | X | | | 11 |
| X | 12 | | | | | 13 | X | X | |
| 14 | | | | X | X | 15 | | X | |
| | 16 | X | | X | 17 | | | | 18 |
| X | | 19 | | | 20 | X | | X | 21 |
| | 22 | | 23 | X | | | 24 | | 25 |

**வலமிருந்து இடம் ;** ←

3. அதிகப்படியான நீர் - (3)
9. மனைவி-(3)
10. டேமேஜ்- தமிழ் சொல் (4)
16. முதலாளியை ஆங்கிலத்தில் இவ்வாறு அழைப்பர் - (2)
18. மேற்கு வங்காளத்தின் பிரபலமான இனிப்பு (5)
20. வண்டியில் குதிரையைப் பிணிக்கும் தோல் பட்டை -(5)
23. வாத்திய வகை கலைந்துள்ளது.(4)
13. வஞ்சகம் சதி - (4)
11. கிணற்றில் கயிறு இருக்க உதவும் சக்கரம், (3)
25. விலையுயர்ந்த பச்சை மணிக்கல் - (5)

1. வாக்களிப்பு (4)
5. மராட்டிய பேரரசர் (5)
6.நான்கு வாரம் ஒரு (3)
7. தன் - பன்மை - (2)
8. சொல், கூறு, தெரிவி-(2)
12. தாய் (3)
14. தானம்.(10)

**இடமிருந்து வலம்:** →

**மேலிருந்து கீழ்** ↓

1. உராய்ந்து போன ஒரு பொருளின் நிலை- (5)
2. செம்படவன் - (4)
3. நிலம் செழுமை பெற இடப்படும் பொருள்- (3)
6. ஹானர்- தமிழ் சொல்
7. நிலம் வேறு சொல் (2)
8. பயிற்சி உடலுக்கு நல்லது-(3)
10. படை, ஒரு வகை கிழங்கு. (2)
13. போட்டி-(3)
14. பத்து- ஹிந்தியில் (2)
17. குதிரையின் காலில் அடிப்பது (3)
19. தண்ணீர் கொண்டு செல்ல பயன்படுவது- (2)
21. சரி ... பா (இசை) (2)

**கீழிருந்து மேல்** ↑

4. பசுவிடம் .கிடைப்பது-(2)
5. தவறல்ல -(2)
9. கொண்ட மீனொன்று (3)

22.அரசப் பேரவை : ரஜினியின் திரைப்படம்-(4)

23. பாம்பு கேட்டு மயங்கும் இசைக் கருவி - (3)
24. இருள் – (4)
25. தைமாதம் பிறப்பு -(9)

மு..பாண்டிமித்ரா

**I B.sc Zoology**

# Answer

**இடமிருந்து வலம் :** →

1. வாக்களிப்பு- தேர்தல்

5. மராட்டிய பேரரசர்- சத்ரபதி

6.நான்கு வாரம் -மாதம்

7. தன்-பன்மை - தம்

8. சொல்,கூறு, தெரிவி - உரை

12. தாய் -அன்னை

14. தானம் – தர்மம்

**வலமிருந்து இடம் :** ←

3. அதிகப்படியான நீர் - உபரி

9. மனைவி-தாரம்

10. டேமேஜ்- சேதாரம்

16. முதலாளி - பாஸ்

18. மேற்கு வங்காளத்தின் பிரபலமான இனிப்பு (உணவு) -ரசகுல்லா

20. வண்டியில் குதிரையைப் பிணிக்கும் தோல்பட்டை - டங்குவார்

22. வாத்திய வகை கலைந்துள்ளது மத்தளி

11. கிணற்றில் கயிறு இழுக்க உதவும் சக்கரம்- கப்பி

13. வஞ்சகம்; சதி :-- சற்பனை

25. விலையுயர்ந்த பச்சை மணிக்கல் – மரகதம்

**மேலிருந்து கீழ்** ↓

1.உராய்ந்து போன ஒரு பொருளின் நிலை - தேய்மானம்

2. செம்படவன் - மீனவன்

3.நிலம் செலுமை பெற இடப்படும் பொருள் - உரம்

6. ஹானர் - மானம்

7. தரை

8 .......பயிற்சி உடலுக்குநல்லது- உடற்

10. படை, ஒரு வகை கிழங்கு – சேனை

13. போட்டி -

14. பத்து- ஹந்தியில்

17. குதிரையின் காலில் அடிப்பது - டங்குவார்.

15. தண்ணீர் கொண்டு சொல்ல பயன்படுவது. – வாளி

21. சரி....பா ....கம

**கீழிருந்து மேல்** ↑

4. பசுவிடம் கிடைப்பது - பால்

5. தவறல்ல -சரி

௭. ......கொண்ட மீனொன்று தாகும்

22 அரசப் பேரவை ரஜினியின் திரைபடம் தர்பார்

23 பாம்பு கேட்டு மயங்கும் இசைக் கருவி - மகுடி

24 இருள் - கங்குல்

25. தைமாதப் பிறப்பு - மகரசங்கராந்தி



M.Kalaivani

I BCA



B.Sathana

I B.Sc (CS)



A.Mahalingam

II M.Com (CA)




M.Nivetha

I MA History



M.Kaviya

I B.Com (CA)



V.Santhya

III B.Sc Zoo



J. Vijaya Lakshmi

I B.Com (CA)




Udaya Sri

II B.Sc Chemistry



T.Iris Joy

I B.Com (CA)



K.Tamil Selvi

I M.Com




R.Asreen

I B.Com (CA)



T.Iris Joy

I B.Com (CA)




M.J. Jemimaah

III B.Sc Zoo




R.Santhiya

I B.Sc Maths

K.Tamil Selvi

I M.Com



# SAIVA BHANU KSHATRIYA COLLEGE, ARUPPUKOTTAI

## FINAL YEAR STUDENTS

## 2025-2026

**B.A. History**



**B.Sc. Mathematics**



**B.Sc. Chemistry**



**B.Sc. Zoology**



**B.Com.**



B.A. Tamil



B.A. English



B.Sc.  IT



B.Sc. Computer Sciene



B.C.A.



B.Sc. Physical Education



B.Com. CA



B.Com. PA



**M.A. History**



**M.A. English**



**M.Sc. Mathematics**



**M.Sc. Chemistry**



**M.Sc. Zoology**



**M.Com.**



**M.Com. CA**

